1981 ஆகஸ்ட் 27]

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 264 தொழிற் சாலைகள் இருக்கின்றன. அவற்றிலே பல தொழிற்சாலைகள் சுகாதார இலாக்காவின் சான்றிதழைப் பெறாமல் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அப்படிச் சான்றிதழ் வாங்காத தொழிற் சாலைகளை மூடிவிடுவதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா? தோல் பதனிடும் தொழிற்சாலைகள் போன்ற இத் தொழிற் சாலைகளுக்கெல்லாம் இவ்வாறு கழிவு நீரை ஆவியாக்கி வெளி யேற்றும் செலவிற்காக நாமே கடன் கொடுத்து கண்டிப்பாக இந்த முறையினைப் பின்பற்ற வேண்டும் என்ற வகையிலே நிலைமையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளை உடனடியாக மூடிவிட வேண்டும் என்பது எளிது. ஆனால் அதிலே பல பிரச்சினைகள் எழும். இருந்தாலும் தாட்சண்யம் காட்டாமல் படிப்படியாக உறுதியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

தூத்துக்குடி—துரைச்சாமிபுரம் பேருந்துப் பணி.

* வினா எண். 96— திரு ரா. கு. பெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி-மேல அரசடி வழியாக துரைச்சாமிபுரம் வரை முன்பு ஓடிக் கொண்டிருந்த லயன் பஸ் வெகு நாட்களாக நின்றுவிட்டது. மேற்படி ரூட்டில் பஸ் விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி—துரைச்சாமிபுரம் தடத்தில் சாலை பழுதுபட்டிருந்ததால் பேருந்து ஓடவில்லை. தற்போது சாலை சீர் செய்யப்பட்டு 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதக் கடைசி வாரத்திலிருந்து பேருந்து ஓடு கிறது.

மானாமதுரைத் தொகுதியில் டீசல் விநியோகம்.

* வினா எண் 97.— திரு. க. பாரமலை : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மானாமதுரைத் தொகுதியில் டீசல் சரிவர விநியோகம் செய்யப்படாததின் காரணமாக பம்பு செட்டுகள் ஓடாமல் இருப்பதாலும், வெல்லம் தயாரிக்கும் ஆலைகள் இயங்காமல் இருப்பதாலும் விவசாயிகள் படும் அல்லலைப்போக்க ஏதாவது மாற்று ஏற்பாடுகள் செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மானாமதுரைத் தொகுதியில் பம்ப் செட்டுகளுக்கும், வெல்லம் தயாரிக்கும் ஆலைகளுக்கும் எந்த அளவுக்கு டீசல் தேவையோ அந்த அளவுக்கு டீசல் வினியோகிக்கப்படுகிறது. எனவே மாற்று ஏற்பாடுகள் செய்வது பற்றி மறுபரிசீலனை தேவையில்லை.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டில் தமிழக அரசு மத்திய அரசிடம் எவ்வளவு டீசல் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டது? மைய அரசு தமிழக அரசிற்கு எவ்வளவு டீசல் ஒதுக்கியது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் மைய அரசு நம்முடைய மாநில அரசுக்கு ஒதுக்கிய டீசல் எண்ணெயின் அளவு 73,700 மெட்ரிக் டன். அதற்குப் பின்னாலே பிப்ரவரி மாதத்திலே 72,500 மெட்ரிக் டன்னும் மார்ச் மாதத்திலே 98,300 மெட்ரிக் டன்னும் ஒதுக்கி இருக்கிறார்கள். எனவே, இன்னும் கூட அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நாம் மைய அரசிடம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, வெல்லம் ஆடக் கூடிய நேரத்திலே மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுகின்றது. டீசலும் கிடைப்பதில்லை. அதன் காரணமாக சாதாரண விவசாயிகள் கூட மிகப்பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே இதற்கு மாற்று ஏற்பாடு செய்வார்களா? இக் கேள்விக்கு நேரடியாகப் பதில் வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மின்சாரம், டீசல் இவற்றைத் தவிர வேறு ஏதாவது மாற்று ஏற்பாட்டைக் கேட்கிறார்களா என்பது தெரியவில்லை, அப்படி எது என்று சொன்னால் அதைப் பற்றி பரிசீலித்து அரசாங்கம் பதிலளிக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே. கேட்டிருக்கிற கேள்வி மின்சாரம் சரியாக இல்லாத காரணத்தால் பம்ப் செட்கள் இயங்காமல் இருக்கின்றன என்பது, மேலும் சரியான முறையிலே டீசலும் கிடைக்கவில்லை. ஆகவே விவசாயிகள் நல்ல முறையிலே உணவு உற்பத்தியினைப் பெருக்கக்கூடிய அளவில் அங்கே டீசல் எண்ணெயை அதிகமாக்கிக் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அந்தக் கேள்விக்குதான் நானும் பதிலைச் சொன்னேன். தேவையான அளவுக்கு அங்கே டீசல் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதிலே எந்தவிதமான இடையூறும் இல்லை. ஏறத்தாழ அங்கே ஒதுக்கப்பட்ட டீசல் 4481 கிலோ லிட்டர், ஆனால் அங்கே பயன்படுத்தப்பட்ட எண்ணெயின் அளவு 4146

கிலோ லிட்டர்தான். ஆக 335 லிட்டர் அதிகமாகவே கொடுத்திருக்கிறோம். ஆகவே அந்தப் பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா என்ஜினியரிங் கார்ப்பரேஷன் தொழிற்சாலை.

* வினா எண். —98 திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா என்ஜினியரிங் கார்ப்பரேஷன் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் என்ன ?

(ஆ) செயல்படும் தொழிலாளர்கள் எத்தனை பேர் ?

(இ) சென்ற ஆண்டில் எவ்வளவு லாபம் சம்பாதித்துள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மோட்டார் வாகன உதிரி உறுப்புகள் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் உபயோகிக்கத் தக்க வகையில் புதுப்பிக்கப்படுகின்றன. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளுக்கு கூடுகள் கட்டப்படுகின்றன. டயர்கள் புதுப்பிக்கப்படுகின்றன.

(ஆ) 336 பேர்கள்.

(இ) 1979-80-ல் வருமான வரி போக நிகர லாபம் 3 லட்சத்து 71 ஆயிரம்.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அண்ணா கார்ப்பரேஷனின் இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பல பேருந்துகளை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய அந்த நிறுவனம் உபயோகப்படுத்தப்பட்ட இன்ஜின் ஆயிலை திரும்பவும் சுத்தப்படுத்தி குறைந்த செலவிலே அதைப் பயன்படுத்திவதற்கான ஏற்பாட்டை அந்த இன்ஜினியரிங் கார்ப்பரேஷன் மூலம் செய்ய முடியுமா? அதற்கு ஏதாவது திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட காரியத்தை போக்குவரத்துக் கழகங்களிலே செய்ய முடியும். செய்துக் கொண்டிருக்கிறோம், அண்ணா போக்குவரத்துக் கழகங்களிலும் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கு, ரமணி: தலைவர் அவர்களே, அதிலே வேலை செய்யக் கூடிய 300க்கும் மேற்படும்படியான தொழிலாளர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்கும் வகையில், உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தூண்டுகிற அளவிற்கு, ஊக்க போனஸ் அதாவது